**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2022ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ம் நாள் திங்கட்கிழமை**

***இடைநிலை மனு எண்.1/2021***
**இன்**
***இடைநிலை மனு எண்.46/2014***
**இன்**
***அசல் வழக்கு எண்.12/2014***

M. சங்கர்ரெட்டி . . . மனுதார்/வாதி

/எதிர்/

1. மாடசாமி
2. குருசாமி . . . எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 13.04.2022ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ரவிசங்கர் அவர்களும், 1ம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சண்முகையா அவர்களும் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதார் பிரதான அசல் வழக்கிலேயே நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பில் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், இரு தரப்பு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உ த் த ர வு</u>**

பிரதான அசல் வழக்கில் ஆணையர் வாரண்டை Re-Issue செய்து, ஆணையர் அவர்கள் மாவட்ட நில அளவையர் (Inspector of Survey) அவர்கள்

மூலம் உரிய ஆவணங்கள் சகிதம் பிராது தபசில் சொத்தைப் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரால் இம்மனு உ.வி.மு.ச., கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:

பிரதான அசல் வழக்கானது விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், ஷை வழக்கில் ஆணையர் நியமனம் கோரி இடைநிலை மனு எண்.46/2014 மனு தாக்கல் செய்யப்பட்டு, அதன்பேரில் நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்துக்களைப் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆணையர் தனது அறிக்கையில், நில அளவையர் பிராதின் தபசில் சொத்து புஞ்சை நிலமாகவே பதிவில் உள்ளதாகவும், மனை பிரிவுகளாக காட்டப்படவில்லை எனக் கூறியதாகவும், எனவே, பிராது தபசில் சொத்தை சரியாக அடையாளம் கண்டு அளக்க முடியவில்லை என்று கூறியும், மேலும் தபசில் சொத்துக்குரிய ஆவணங்கள் திருநெல்வேலி நில அளவை மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ளதாகவும் கூறி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நிலையில் பிரதான அசல் வழக்கில் ஆணையர் வாரண்டை Re-Issue செய்து, ஆணையர் அவர்கள் மாவட்ட நில அளவையர் (Inspector of Survey) அவர்கள் மூலம் உரிய ஆவணங்கள் சகிதம் பிராது தபசில் சொத்தைப் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியம் என்றும், இல்லையெனில் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், தபசில் சொத்து பிளாட்டுகளாக பிரிவினை செய்தது போன்று எவ்வித அமைப்பும் பூமியில் இல்லை என்றும், தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள புல எண்கள்.528/1, ஆகமொத்தம் 3 ஏக்கர்

98 செண்டும் ஒரே எடுப்பாக எவ்வித பிரிவினையும் இல்லாமல் காலியாக உள்ளது என்றும், தபசில் சொத்துக்கள் வீடு கட்டக்கூடிய பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டிருந்தால் அது சம்பந்தமாக Layout வரைபடத்தை சங்கரன்கோவில் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலோ அல்லது Director of Town Country Planning Authority அலுவலகத்திலோ சமர்பித்து அங்கீகாரம் பெற்றிருப்பார்கள் என்றும், அதுசம்பந்தமாக எவ்வித ஆவணங்களையும் மனுதார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், திருநெல்வேலி நில அளவையர் மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்திலுள்ள வருவாய் ஆவணங்களை வைத்து மனுதார் கோரும் மனைகளை அடையாளம் காண இயலாது என்றும், மற்றபடி மனுதார் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றும், எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

5. இரு தரப்பிலும் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **தீர்வு** :

இடைநிலை மனு எண்.46/2014 உத்தரவின் பேரில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில், தாவா சொத்து புஞ்சை நில வகைப்பாடாகவே வருவாய் துறை பதிவில் உள்ளதால், மனு சொத்தினை சரியாக அடையாளம் காண இயலவில்லை என்றும், மனு சொத்திற்கான

ஆவணங்கள் திருநெல்வேலி நில அளவை மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ளதாக கூறியுள்ளமையால், திருநெல்வேலி மாவட்ட நில அளவையர் மூலம் மனு சொத்தினை பார்வையிட்டு அறிக்கை அளிக்க நீதிமன்ற ஆணையருக்கு மறு வாரண்டு பிறப்பிக்க வேண்டுமென மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. மனுதார் தனது மனு மற்றும் பிராதில், தாவா சொத்தானது மனை பிரிவு எண்.61 என குறிப்பிட்டுள்ள நிலையில், பூமியில் தாவா சொத்து மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான அமைப்புகள் இல்லாமல், மொத்த விஸ்தீரணமான 3 ஏக்கர் 98 செண்ட் ஒரே எடுப்பாக உள்ளதால், மனு சொத்தினை அடையாளம் காண இயலவில்லை என்றே ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில், மொத்த விஸ்தீரணத்தை பொறுத்து மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான லேஅவுட் வரைபடத்தினை மனுதார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மாவட்ட பதிவேட்டில் உள்ள வருவாய் துறை ஆவணங்களின்படியும் மனு சொத்தினை அடையாளம் காண இயலாது என்றும், மனுதார் வழக்கு விசாரணையை காலம் கடத்தும் நோக்குடன் மனு சொத்தினை அடையாளம் காண்பதற்கு லேஅவுட் உள்ளிட்ட யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யாமல் பொய்யான அம்சங்களை கூறி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

8. வழக்கு கோப்பினை ஆராய்கையில், அசல் வழக்கானது விளம்புகை, சுவாதீன ஒப்படைவு மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கானது விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்ட நிலையில், தாவா சொத்தினை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனுதார் தரப்பில் இ.ம.எண்.46/2014 மனு தாக்கல் செய்யப்பட்டு அதன்படி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, மனு சொத்தினை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு, 12.04.2019ல் தனது அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார். மேலும், நீதிமன்ற ஆணையர்

அறிக்கையில் மனுச் சொத்தினை நிலஅளவையர் உதவியுடன் ஆய்வு செய்தபொழுது மனுச்சொத்தின் மொத்த விஸ்தீரணமும் புஞ்சை வகைப்பாடாக உள்ளதாகவும், மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லாததால், மனுச்சொத்தினை அடையாளம் காண இயலவில்லை என அறிக்கை அளித்துள்ள நிலையில், மனுச் சொத்தினை மீண்டும் பார்வையிட மறுவாரண்ட் பிறப்பிக்க மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

9. மனுதாரர் தனது மனுவில், மனுச் சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் இல்லாததால், மனுச் சொத்தினை அடையாளம் காண இயலவில்லை என்றும், மனுச் சொத்திற்கான ஆவணங்கள் திருநெல்வேலி நில அளவை மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ளமையால், மாவட்ட நில அளவையர் உதவியுடன் மேற்கண்ட ஆவணங்களின் அடிப்படையில் பார்வையிட ஆணையருக்கு மறுவாரண்ட் பிறப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். மேலும், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில், மனுச் சொத்து மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் இல்லாததால், மனுச் சொத்தினை அடையாளம் காண இயலவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு மனுச் சொத்தினை மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் திருநெல்வேலி நில அளவை மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ளதாகவோ அல்லது அந்த ஆவணங்களின் அடிப்படையில் மனுச் சொத்தினை அடையாளம் காண இயலும் என்றோ யாதொன்றும் குறிப்பிடவில்லை. எனவே, ஆணையர் தனது அறிக்கையில், மனுச் சொத்து மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் திருநெல்வேலி நில அளவை மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ளதாகவோ அல்லது அந்த ஆவணங்களின்படி மனுச் சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதை கணிக்க இயலும் என்றோ யாதொன்றும் குறிப்பிடாத நிலையில், மனுதாரர் தனது மனுவில்

ஆணையர் அவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளதாக குறிப்பிடுவது ஏற்புடையது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுச் சொத்திற்கான திருநெல்வேலி நிலஅளவை மற்றும் பதிவேடுகள் உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ள மூல வருவாய் ஆவணங்கள் மூலம் மனுச் சொத்து மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டது தெரியவரும் என்பதால் மாவட்ட நில அளவையர் மூலம் அளவீடு செய்ய உத்தரவிட வேண்டும் என எடுத்துரைத்தார். ஆனால், கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், மனுதாரர் தரப்பு ஆவணப்படியே மனுச்சொத்து 1991ம் ஆண்டிற்கு பின்பு தான் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்ட நிலையில், அதற்கு முந்தைய பதிவேடுகள் மூலம் மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்ட விபரம் யாதொன்றும் துலங்காத நிலையில், வழக்கினை காலம் கடத்தும் நோக்கில் மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைத்தார். அவ்வாறு எதிர்மனுதாரர் குறிப்பிடுவதுபோல் மனுதாரர் தரப்பு ஆவணப்படியே 1991ம் ஆண்டிற்கு பின்பு தான் மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதா? என ஆராய்கையில், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மூல ஆவணமான 30.03.1991 தேதிய பொது அதிகார ஆவணத்தினை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்ய விரும்புகிறது. மேலும், 30.03.1991 தேதிய பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணத்தில் மனுச்சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்படாமல் மொத்த எடுப்பான 3 ஏக்கர் 95 செண்ட்டும் மனுதாரரின் கிரைய முன்னோரான நல்லச்சாமிக்கு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதாக உள்ளது. மேலும், அதன் பின்னர் ஏற்பட்ட மனுதாரரின் கிரைய ஆவணத்தில் மனுச் சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் மூல ஆவணமான 30.03.1991 தேதிய பொது அதிகார ஆவணத்தில் மனுச் சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்படாமல் மொத்த எடுப்பாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளமையால், எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைத்தது போல் மனுச்சொத்து 1991ம் ஆண்டிற்கு பின்னரே மனைப் பிரிவுகளாக

பிரிக்கப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில், *1991*ம் ஆண்டிற்கு முன்னர் ஏற்பட்ட புலவரைபடத்தின் அடிப்படையிலேயே பார்வையிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் ஆணையர் அறிக்கைக்கு தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில், பழைய புலவரைபடம் மற்றும் "அ" பதிவேட்டின் அடிப்படையில் மனுச் சொத்தினை பார்வையிட்டால் மனைப்பிரிவுகள் பிரிக்கப்பட்டுள்ள விபரம் தெரிய வரும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், மனுச் சொத்தின் மொத்த விஸ்தீரணத்தில் *1991*ம் ஆண்டு வாக்கிலேயே மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்ட நிலையில், அந்த காலக்கட்டத்தில் உள்ள வருவாய்துறை ஆவணங்கள் மூலம் மனுச் சொத்தினை ஆணையர் பார்வையிட்டு அளித்துள்ள அறிக்கையில், மனுச் சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான பதிவுகள் எதுவும் வருவாய்துறையில் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள நிலையில், *1991*ம் ஆண்டிற்கு முன்னர் உள்ள பழைய புலவரைபடம் மற்றும் "அ" பதிவேட்டினை பார்வையிடும்பட்சம் மனுச் சொத்தில் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்ட விபரம் தெரியவரும் என மனுதாரர் தரப்பில் குறிப்பிடும் காரணம் முற்றிலும் ஏற்புடையது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

*11.* நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில், மனுச் சொத்து மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாததால் மனுச் சொத்தினை அடையாளம் கண்டு, அளவீடு செய்ய இயலவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுச் சொத்து மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான லேஅவுட் உள்ளிட்ட எந்தவித ஆவணமும் சமர்ப்பிக்காமல் மனைப் பிரிவுகளாக பிரிக்கப்படுவதற்கு முன்னர் உள்ள வருவாய்துறை ஆவணங்கள் மூலம் மனைப்பிரிவு விபரத்தினை தெரிவிக்க, வேண்டுமென்றே இல்லாத சங்கதிகள் குறித்து ஆணையர் நியமனம் கோரி வழக்கினை காலதாமதம் செய்ய இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் தரப்பு வழக்குப்படியே மனைப்

பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதில் உள்ள ஒரு மனையினை மனுதாரர் கிரையம் பெற்றுள்ளார் என்பதே ஆகும். ஆனால், மனுச் சொத்து மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டதற்கான லேஅவுட் உள்ளிட்ட எந்த ஆவணமும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, அதன்படி மனுச் சொத்தினை அடையாளம் காண மனுதாரர் தரப்பில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மேலும், வருவாய்துறை ஆவணத்தில் மனுச் சொத்து மொத்த எடுப்பாக உள்ள நிலையில், முந்தைய கிரையதாரரால் மனைப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, அதில் மனுதாரர் கிரையம் பெற்ற குறிப்பிட்ட மனையானது எந்த இடத்தில் அமைந்துள்ளது என்பது லேஅவுட் மூலமே அடையாளம் காண இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால், அவ்வாறான லேஅவுட் எதையும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து, அதன்படி மனுச் சொத்தினை அடையாளம் காண மனுதாரர் தரப்பில் யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, மனைப்பிரிவுகளாக பிரிப்பதற்கு முன்னர் உள்ள பழைய ஆவணங்கள் மூலம் மனைப் பிரிவு பிரிக்கப்பட்டது குறித்து கண்டறிய இம்மனுவினை தாக்கல் செய்துள்ளமையால், மனுதாரர் வேண்டுமென்றே அசல் வழக்கினை காலதாமதம்படுத்தும் நோக்குடன் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

*12*. கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையில், நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில், மனுச் சொத்தினை அடையாளம் காண இயலவில்லை என தெரிவிக்கும்பட்சம் மனுச் சொத்தினை மறுஅளவீடு செய்ய ஆணையருக்கு மறுவாரண்ட் பிறப்பிக்க வேண்டுமென எடுத்துரைத்து, அதற்கு ஆதரவாக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற Semitta Koundar. 2 . Santhi Vs Murugesan dated: 21.10.2016 reported in 2016(6) CTC 66 என்ற முன்தீர்ப்பினை சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், மேற்கண்ட முன்தீர்ப்பில் ஆணையர் தனது அறிக்கையில் மனுச் சொத்தினை சரியாக அடையாளம் காண இயலவில்லை எனக் குறிப்பிடும்பட்சம், மனுச் சொத்தினை மறுஅளவீடு செய்ய

ஆணையருக்கு மறுவாரண்ட் அளிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவ்வழக்கில் மனுச் சொத்தினை அடையாளம் காண மனுதாரர் தரப்பில் யாதொரு ஆவணமும் தாக்கல் செய்யாமல், மனைப்பிரிவு ஏற்படாத சமயத்தில் உள்ள வருவாய்துறை ஆவணங்களின் மூலம் மனைப்பிரிவு ஏற்பட்டதை கண்டறிய மனுதார் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளமையால், மேற்கண்ட முன்தீர்ப்பு இம்மனுவின் பொருண்மைக்கு பொருந்தாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

*13*. எனவே, மேற்கண்ட காரணங்களுக்காக மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

*14*. இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2022ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.04.25 18:44:11 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

| | |
|---|---|
| மனுதார் தரப்பு சாட்சிகள்: | இல்லை |
| மனுதார் தரப்பு சான்றாவணங்கள்: | இல்லை |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்: | இல்லை |
| எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்: | இல்லை |

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.04.25 18:44:20 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**இடைநிலை மனு எண்.1/2021**
**இன்**
**இடைநிலை மனு எண்.46/2014**
**இன்**
**அசல் வழக்கு எண்.12/2014**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள்: 25.04.2022**